# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 04 வெள்ளி 18.06.2021 மலர் - 2, இதழ் - 73


## அக்கறை கொண்ட குடிமக்கள்

'அக்கறை கொண்ட குடிமக்கள் தமிழ்நாடு' என்பது, ஓய்வு பெற்ற அரசு உயர் அதிகாரிகள், சமுதாய தலைவர்கள், ஓய்வுபெற்ற ராணுவ உயர் அதிகாரிகள், கல்வித்துறை சார்ந்தவர்கள், தொழில்துறை சார்ந்தவர்கள் போன்ற முக்கியஸ்தர்களை கொண்ட ஒரு அமைப்பு. சமீபத்தில், மேற்கு வங்காள சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்பாக நடந்த அரசியல் வன்முறைகள் இந்த அமைப்பினருக்கு மன வருத்தத்தை அளித்தது. அதனால், மேற்கு வங்கத்தின் மக்களுக்கு நேர்ந்த கொடுமைகளை உடனடியாக தடுத்து அமைதியை நிலைநாட்ட, வன்முறையாளர்களை தண்டிக்க, பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளித்திட, பல்வேறு துறைகளை சார்ந்த 74 முக்கியஸ்தர்கள் தங்களது கையொப்பம் இட்ட கடிதங்களை குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்திடம் அளித்திட, இக்கடிதங்களை இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கல்யாண், சின்மயா மிஷனை சார்ந்த சுவாமி திரு. மித்ராநந்தா, நடிகர் சரத் பாபு ஆகியோர் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை நேரில் சந்தித்து வழங்கினர். மேலும், குடியரசுத்தலைவர், இவ்விஷயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைக்கப்பட்டது.



## கோயில் நிலம் ஆக்கிரமிப்பு



காஞ்சிபுரம், செவிலிமேடு மாரியம்மன் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை 2,160 சதுரடி நிலத்தில் தனி நபர் ஒருவர் காங்கிரீட் தளம் போட்டு வீடு கட்டியுள்ளார் என்று வருவாய் கோட்டாட்சியரிடம் கடந்த ஏப்ரல் மாதம் 13 அன்று மனு அளிக்கப்பட்டது. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். மேலும், அந்த நபர் ஆக்கிரமித்த இடத்தில்தான் ஆண்டுதோறும் காப்பு கட்டி திருவிழா நடத்தப்படும். அவர் வீடு கட்ட அஸ்திவாரம் போடும் போதே கோயில் நிலத்தில் வீடு கட்டக் கூடாது என்று கிராம உதவியாளர் தெரிவித்துள்ளார். எனினும் இந்த ஆக்கிரமிப்பு நடந்துள்ளது. எனவே, கோயிலுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பாளரிடம் இருந்து உடனடியாக அரசு மீட்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர் பொதுமக்கள்.

# கோயில் நிலம் மீட்பு




காங்கேயம் பகுதியில் சிவிலியார் பாளையம் பரமசிவன் கோயிலுக்குச் சொந்தமான 70 ஏக்கர் நிலம் உள்ளது. இதன் மதிப்பு ரூ. 50 கோடி. ஹிந்து அறநிலையத்துறை ஆணையர் நடராஜ் தலைமையில் அதிகாரிகள் இந்த நிலத்தை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னிப்பு கேட்ட சன்.டி.வி.

உத்திர பிரதேசத்தில் 'ஜெய் ஸ்ரீராம்' என கூறுமாறு முஸ்லிம் முதியவர் தாக்கப்பட்டதாக போலி செய்தி ஒன்று உருவாக்கப்பட்டு பரப்பப்பட்டது. இந்த போலி செய்தியை முதலில் பரப்பிய தி வயர், ஆல்ட் நியூஸ் முஹம்மது சுபைர், பத்திரிகையாளர்கள் சிலர், இந்த காணொளியை நீக்காமல் போலி செய்தி பரவ காரணமாக இருந்த டுவிட்டர் உள்ளிட்ட 8 பேர் மீது உத்தர பிரதேச காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த பொய் செய்தியை தமிழகத்தில் ஒளிபரப்பிய சன் நியூஸ் மற்றும் பி.பி.சி தமிழ், வினவு உள்ளிட்ட பல செய்தி நிறுவனங்கள், வலைத்தளங்கள் மீதும் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக பா.ஜ.கவினரும் பொதுமக்களும் வலியுறுத்தினர். இந்நிலையில், சன் டிவி உட்பட பல செய்தி ஊடகங்கள் இதற்கு மழுப்பலாக மன்னிப்பு கேட்டுள்ளன.



# ராகுல், ஓவைசி மீது புகார்




உ.பி, காஜியாபாத்தில் அப்துல் சமத் சைஃபி என்பவரை 'ஜெய்ஸ்ரீ ராம்' என சொல்ல சொல்லி சிலர் தாக்கியதாக ஒரு போலி வீடியோ வெளியானது. அவரை தாக்கியவர்களில் முஸ்லிம்களும் அடக்கம். இதற்கு தனிப்பட்ட விரோதம் காரணம் என தெரியவந்தது. இச்செய்தியை வெளியிட்ட டுவிட்டர், ஆல்ட் நியூஸ், தி வயர் ஆகிய நிறுவனங்கள் மீது உ.பி காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. இந்நிலையில், இதை வைத்து வகுப்புவாத கலவரங்களைத் தூண்ட முயன்றதாக, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சித் தலைவர் அசாசுதீன் ஒவைசி மற்றும் ஸ்வாரா பாஸ்கர் மீது, உ.பி, பா.ஜ.க எம்.எல்.ஏ நந்த கிஷோர் குர்ஜார், லோனி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். மேலும், இதில் திட்டமிட்டு கலவரம் ஏற்படுத்த முயன்ற உள்ளூர் சமாஜ்வாதி கட்சித் தலைவர் உமேத் பஹல்வான் இத்ரிஸ் மீது காஜியாபாத் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# பிரிவினைக்கு துணைபோகும் தி.மு.க



பா.ஜ.,வின் சிறுபான்மையினர் பிரிவு தேசிய செயலாளரான வேலூர் இப்ராகிம், “சிறுபான்மையின மக்களை ஓட்டு வங்கியாக பயன்படுத்தும் தி.மு.க, பயங்கரவாத, பிரிவினைவாத சக்திகள் ஆழமாக வேரூன்ற மறைமுகமாக உதவுகிறது. தி.மு.கவின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை காவல்துறையைப் பயன்படுத்தி கைது செய்கிறது. முஸ்லிம்களை தவறாக பயன்படுத்தி கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிறது. மேலும் தேசத்திற்கு எதிரான செயல்கள் செய்ய சில அமைப்பின் தலைவர்கள் முயற்சிக்கும் போது, பக்கபலமாகவும் தி.மு.க இருந்து வருகிறது. இதை விளக்கி, பா.ஜ.க சிறுபான்மையினர் பிரிவினர் பிரசாரம் செய்வர்” என கூறியுள்ளார்.

# வீட்டை செப்பனிட 9 கோடியா?



டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது வீட்டை செப்பனிடவும் மேம்படுத்தவும் மக்களின் வரிப் பணத்தில் சுமார் 9 கோடி ரூபாயை செலவிடுவதாக பா.ஜ.க தலைவர் நவீன் குமார் ஜிண்டால் குற்றம் சாட்டியுள்ளார். அதில் மக்கள் தண்ணீருக்கு கஷ்டப்படும்போது முதல்வர் வீட்டில் நீச்சல் குளம் கட்டுகிறார். சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு பதிலாக தனது வீட்டை மேம்படுத்துகிறார் என கூறி அதற்கான டெண்டர் நகலை வெளியிட்டுள்ளார். மேலும், கெஜ்ரிவால் அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் விளம்பரங்கள் செய்வதற்கு மட்டுமே ரூ. 800 கோடிக்கு மேல் செலவிட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பலிகடா ஆக்கப்பட்ட நடிகை




லட்சத்தீவு மக்களைக் கொல்ல மத்திய அரசு, கொரோனாவை உயிரி ஆயுதமாக பயன்படுத்துகிறது என கூறிய நடிகையும் தயாரிப்பாளருமான ஆயிஷா சுல்தானா மீது தேசத் துரோகம் உள்ளிட்ட பல வழக்குகள் பதியப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இது குறித்து பேசிய அவர், அது வாய் தவறி வந்த சொல், அந்த நிகழ்ச்சியை வெளியிட்ட மீடியா ஒன் மலையாள செய்தி சேனல், தன்னுடைய கருத்தை வெளியிட அவகாசம் அளிக்கவில்லை, பலமுறை கேட்டும் வாய்ப்பை மறுத்துவிட்டது, தன்னை வேண்டும் என்றே சிக்க வைத்து விட்டது என கூறியுள்ளார். மீடியா ஒன் சேனலுக்கு நிதியளித்து நடத்துவது ஜமாத்இஇஸ்லாமி அமைப்பு என்பதும் அது, லட்சத்தீவு நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்து போலி செய்திகளை வெளியிட்டு மக்களைத் தூண்டிவிடுவதில் அதிக முனைப்பு காட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# ஊடுருவல்காரர்கள் கைது



வங்கதேசத்தை சேர்ந்த சிலர் நமது எல்லைப் பகுதியில் சுற்றித் திரிந்தனர். சந்தேகத்தின் பேரில் அவர்களை எல்லைப் பாதுகாப்புப் படையினர் விசாரித்தனர். அதில் அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தனர். இதனால் அவர்களை எல்லை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர். மேற்கொண்டு நடைபெற்ற விசாரணையில், இவர்கள் அனைவரும் மும்பையில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும் அம்மாநிலத்தில் வாக்குரிமை பெற்றுள்ளதும் தெரியவந்தது. அம்மாநில அமைச்சர் ஒருவரின் ஆதரவு தங்களுக்கு இருப்பதாகவும் அவரிடம் சொல்லி பி.எஸ்.எப். வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டியுள்ளனர் இவர்கள்.

# காங்கிரசுக்கு பிடிக்காத வார்த்தை




காங்கிரஸின் மாணவர் பிரிவான என்.எஸ்.யு.ஐ அமைப்பின் ஜார்கண்டை சேர்ந்த ஏழு உறுப்பினர்களை தங்கள் கட்சியின் அதிகாரபூர்வ வாட்ஸ்அப் குழுவில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு விலக்கி வைத்தது காங்கிரஸ் கட்சி. காரனம் வேறொன்றும் இல்லை, அவர்கள் அந்த வாட்ஸ்அப் குழுவில், ‘ஜெய் ஸ்ரீராம்’ என பதிவிட்டனர் என்பதால் இந்த நடவடிக்கை!!! இது குறித்து கருத்து கூறிய என்.எஸ்.யு.ஐ மாவட்டத் தலைவர் ரோஸ் டிர்கி, அவர்கள் அனைவரும் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். குறிப்பிட்ட மதத்தை ஊக்குவித்தனர், பிரிவினையை தூண்டினர் என குற்றம் சாட்டியுள்ளார்.


# இந்தியாவில் இஸ்ரேல் விவசாய முறை

தோட்டக்கலை துறையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, இஸ்ரேலில் விவசாயம் செய்யப் படுகிறது. அதே தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி கர்நாடகாவின் கோலார், பாகல்கோட், தார்வாட் ஆகிய மூன்று மாவட்டங்களில் தோட்டக்கலை துறை உற்பத்தி மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதன்படி நாட்டின், 29 நகரங்களில் தோட்டக்கலை உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை காணொலி காட்சி வாயிலாக மத்திய விவசாயத் துறை அமைச்சர் நரேந்திரசிங் தோமர் திறந்து வைத்தார். இதற்காக, செயற்கைகோள் அளிக்கும் தகவல்படி நீர் மேலாண்மை, சொட்டு நீர் பாசனம், இயற்கை உரம், ஆகியவற்றை கொண்டு விவசாயம் செய்ய கர்நாடக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



# அதிகத் திறனுடைய தடுப்பூசி

பாரதத்தில், தற்போது மூன்றாம் கட்ட மருத்துவ பரிசோதனையில் உள்ள, பயாலிஜிக்கல் இ நிறுவனத்தின் கோர்ப்வாக்ஸ் தடுப்பூசியானது கொரோனாவிற்கு எதிராக 90 சதவீதம் திறனுடையது. கொரோனா தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் என தெரியவந்துள்ளது. 'அமெரிக்காவை சேர்ந்த மருத்துவ நிறுவனம் கண்டுபிடித்த 'நோவாக்ஸ்' தடுப்பூசி கொரோனாவை கட்டுப்படுத்துவதில் 90 சதவீத திறன் பெற்றது. மேலும் விலை குறைவாகவும் இருக்கும். அதனை பாரதத்தில் சீரம் நிறுவனம் உற்பத்தி செய்ய உள்ளது. பயாலாஜிக்கல் இ நிறுவனம் தயாரிக்கும் கோர்ப்வாக்ஸ் தடுப்பூசியும் இதே திறன் பெற்ற தடுப்பூசி. இது அனைத்து வயதினருக்கும் ஏற்றது. அக்டோபர் மாதத்தில் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உருமாறிய கொரோனாவிற்கு எதிராகவும் இந்த தடுப்பூசி சிறப்பாக செயல்படும் என பயாலாஜிக்கல் இ நிறுவனம் கூறியுள்ளது' என, மத்திய அரசு அமைத்த கோவிட் கட்டுப்பாட்டுப் பணிக்குழுவின் தலைவரான மருத்துவர் என்.கே அரோரா தெரிவித்துள்ளார்.



# கரீனா கபூர் விளம்பரம் நிறுத்தம்

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யோகா குறித்த ஆயுஷ் அமைச்சகம் வெளியிட்ட விளம்பரத்தில், ஹிந்தி நடிகை கரீனா கபூர் நடித்திருந்தார். முன்னதாக, கத்துவா வழக்கு குறித்து முழுவதுமாக அறிந்துகொள்ளாமல், ஒருசார்பாக டுவிட்டரில் கருத்து பதிவிட்ட கரீனா, 'நான் ஒரு இந்தியர் என கூற வெட்கப்படுகிறேன்' என கூறியிருந்தார். நாட்டை இழிவுபடுத்தும் கரீனாவை எப்படி அதில் நடிக்க அழைக்கலாம் என கேட்டு, நெட்டிசன்கள் பலர் கடும் கண்டனம் எழுப்பினர். பா.ஜ.க தலைவர் கபில் மிஸ்ராகூட இதற்கு கண்டனம் தெரிவித்தார். இதனை அடுத்து, அந்த விளம்பரத்தை ஆயுஷ் அமைச்சகம் திரும்பப் பெற்றது.



# ராகேஷ் பண்டிட் இல்லத்தில் ஆளுனர்

கடந்த ஜூன் 2ம் தேதியன்று காஷ்மீரில் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பா.ஜ.க. கவுன்சிலர் ராகேஷ் பண்டிட் இல்லத்திற்கு துணை நிலை ஆளுனர் மனோஜ் சின்ஹா நேரில் சென்று அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். அரசின் நிவாரணமாக ரூ. 40 லட்சத்தை ராகேஷ் பண்டிட் குடும்பத்திற்கு அளித்தார்.



# கொல்லத்தில் ஜெலட்டின் குச்சிகள்

கேரள மாநிலம் கொல்லம் அருகே வனப்பகுதியில் 2 ஜெலட்டின் குச்சிகள், 6 டெட்டனேட்டர் பேட்டரிகள், ஒயர்கள் இருந்ததை வனத்துறையினர் கண்டுபிடித்தனர். இதே போல, பத்தனம்திட்டா மாவட்டம் கோநி வனப்பகுதியிலும் 90 ஜெலட்டின் குச்சிகளை கண்டுபிடித்து உள்ளனர். இச்சம்பவம் கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மத்திய உளவு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஜெலட்டின் குச்சிகள் திருச்சியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது தெரியவந்தது. ஆனால், அவற்றில் பேட்ச் எண் இல்லாததால் யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்பதை கண்டுபிடிக்க இயலவில்லை. இவை, அதிக சக்தி வாய்ந்தவை அல்ல என்பதால் வெடிகுண்டு தயாரிக்கும் பயிற்சிக்கு இவற்றை பயன்படுத்தி இருக்கலாம் என்று சந்தேகிக்கும் கேரள பயங்கரவாதத் தடுப்பு படையினர் இச்சம்பவம் தொடர்பாக தமிழகத்தில் விசாரணை நடத்த உள்ளனர்,. இந்நிலையில், அங்கு தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட 4 மாநில இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்திருப்பது உறுதியாகி உள்ளதால் எல்லை பகுதிகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன.




# சிறைபட்ட கொடி காத்த விஷால்



ஆஸ்திரேலிய தலைநகர் சிட்னியில், கடந்த பிப்ரவரி மாதத்தில் பாரதத்தின் விவசாய சட்டங்களுக்கு எதிராக அங்குள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது அவர்கள், இந்திய தேசியக்கொடியை சேதப்படுத்த முயன்றனர். இதனை பார்த்த விஷால், அந்த கூட்டத்தின் உள்ளே நுழைந்து தேசத்தின் கொடியைக் காக்க முயன்றார். அப்போது கூட்டத்தை கலைக்க முயன்ற ஆஸ்திரேலிய காவலர்கள் இவரையும் காலிஸ்தானியர் என நினைத்து கைது செய்து சிறையில் அடைத்தனர். ஆஸ்திரேலியாவில் படிக்க சென்ற ஹரியானாவை சேர்ந்த மாணவர் விஷால். அங்கு அவர், கடந்த ஜனவரி 26 அன்று இரவில், விவசாய சட்டத்தை ஆதரித்தும், பிரிவினைவாதிகளுக்கு எதிராகவும் "மூவர்ணக் கொடியுடன் கார் பேரணியை" ஏற்பாடு செய்தார். அதில், பிரிவினைவாதிகளின் காலிஸ்தானியக் கொடியை எரித்தார். இதனால், அவர் காலிஸ்தானியர்களின் இலக்காக ஆனார். காலிஸ்தானிகள் அவரது வீட்டிற்குள் நுழைந்து காரை சேதப்படுத்தினர். பலமுறை அவரையும் தாக்க முயன்றனர். அவரது நண்பர்களான வேறு சில இந்திய மாணவர்களை தாக்கினர். தற்போது, தவறுதலாக காலிஸ்தானியர் என சிறையில் அடைக்கப்பட்ட விஷாலுக்கு உதவ சில இந்திய அமைப்புகள் முன்வந்துள்ளன. ஒரு வழக்கறிஞர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளார். காலிஸ்தான் சார்பு குழுக்கள் ஆஸ்திரேலியாவில் மோடி சார்பு குழுக்களை குறிவைத்து வருகின்றன, சிறையிலும் விஷால் காலிஸ்தானிகளால் தாக்கப்பட்டுள்ளார், எங்களது மகனை காக்க இந்திய தூதரகம் விரைந்து முயற்சிக்க வேண்டும் என்று அவரது தந்தை நாதுராம் கோரிக்கை வைத்துள்ளார்.

# தலைவரானார் சத்ய நாதெல்லா



மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக, பாரத வம்சாவளியை சேர்ந்த சத்ய நாதெல்லா, கடந்த 2014ம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். லிங்க்ட் இன், நுவான்ஸ் கம்யூனிகேஷன்ஸ், உள்ளிட்ட நிறுவனங்களை கையகப்படுத்துவது, கிளவுட் தொழில்நுட்பம், தேவையற்ற 18 ஆயிரம் பணியிடங்கள் நீக்கம், எளிமையான கட்டமைப்பு என பல நிர்வாக சீர்திருத்தம், புதுமைகளை மேற்கொண்டார். இதனால், மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் சந்தை மதிப்பும் 2 லட்சம் அமெரிக்க டாலரை எட்டுகிறது. தற்போது, மைக்ரோசாப்ட்டின் இயக்குநர்கள் குழு தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனஅறிவிக்கப்பட்டு உள்ளது. முன்னதாக, இயக்குநர்கள் குழு தலைவராக, பில்கேட்ஸ், ஜான் தாம்சன் ஆகியோர் பதவி வகித்து உள்ளனர். தற்போது ஜான் தாம்சனுக்கு பதிலாகவே சத்ய நாதெல்லா நியமிக்கப்பட்டு உள்ளார்.

# வீரத்தை விதைத்துச் சென்ற வீரமங்கை



மணிகர்ணிகா நவம்பர் 19, 1828 காசியில் பிறந்தார். சிறு வயது முதலே போர் புரியும் ஆசையோடு வாள்வீச்சு, குதிரை ஏற்றம் போன்ற போர்க் கலைகளை கற்றுக்கொண்டார். பிறகு, 1842ம் ஆண்டு ஜான்சியின் மன்னர் ராஜா கங்காதர ராவ் நெவல்கருக்கு மணம் முடிக்கப்பட்டார் மணிகர்ணிகா.

இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து, நான்கு மாதங்களில் அந்த குழந்தை இறந்தது. பின்னர் ஒரு குழந்தையினை தத்தெடுத்து தாமோதரராவ் என்று பெயர் சூட்டி வளர்த்தனர். மணிகர்ணிகாவிற்கு 'லட்சுமிபாய்' என்ற சிறப்பு பட்டம் கிடைத்தது. மேலும் அவர் ஜான்சியின் ராணியாக அரியணையில் அமர்ந்ததால் அன்றிலிருந்து அவருடைய பெயர் 'ஜான்சிராணி லட்சுமிபாய்' என்றானது.

மகனின் இறப்பை தாங்காத மன்னன் 1853ம் ஆண்டு உடல்நலம் பாதித்து இறந்தார். பின்னர் ஆங்கிலேயர்கள் ஜான்சி ராணியை கோட்டையை விட்டு வெளியேற சொன்னார்கள். தாமோதராவ் வளர்ப்பு மகன். சட்டப்படி அரச வாரிசுதான் மன்னராக ஏற்றுக்கொள்ளப்படுவார். வளர்ப்பு மகன் அரசனாக முடியாது, என்று கூறி 60 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியமாக அளித்து அவரை கோட்டையை விட்டு வெளியேற்றினர். 1857ல் சுதந்திரக் கிளர்ச்சி ஏற்பட்டது அதன் முதல் காரணம் ராணுவ வீரர்கள் பயன்படுத்தும் துப்பாக்கி குண்டில் பசு, பன்றிக் கொழுப்பு தடவப்பட்டிருந்தது. அச்சமயம் ஜான்சிராணி தனது ஆதரவாளர்களை தேடி சென்று படைபலத்தினை அதிகரித்து, போருக்காக காத்திருந்தார்.

பிறகு 1858ம் ஆண்டு குவாலியருக்கு படையெடுத்த ஜான்சிராணி மன்னனை வீழ்த்தி குவாலியரை தன் வசப்படுத்தினார். அந்த போரில் ஜான்சிராணியின் வாள் வீசும் வேகத்தினை கண்ட படைவீரர்கள் அவரை நெருங்க பயந்தனர். ஆங்கிலேய ராணுவம் குவாலியரை கைப்பற்ற மிகப்பெரிய படையுடன் வந்தது. அப்போரில் ஆண் வேடந்தரித்து போராடினார்.

பெரிய ஆயுதப்படையுடன் இருந்த அவர்களுக்கு எதிராக சண்டையிட்டு சமாளிக்க இயலாமல் எதிரிகளின் படையினரால் தாக்கப்பட்டு வீரமரணம் அடைந்தார். ஜான்சிராணி 1858ஆம் ஆண்டு ஜூன் 18ல் வீரமரணம் அடைந்தார். பிறகு ஜான்சிராணியின் உடல் குவாலியரின் அருகில் தகனம் செய்யப்பட்டது.

ப. கமலயாழினி

# மகிழ்ச்சியின் மறுபெயர்

மகிழ் உலா, சிற்றுலா என பல பெயர்களில் அழைக்கப்படும் 'பிக்னிக்' என்பது மனிதனின் அக இன்பத்தை (சுற்று)புறமாக வெளிப்படுத்துவது. இது இயற்கையோடு உறவாட ஒரு இனிய வழி. ஈதலும், இன்புற்று வாழ்தலும் இதில் அடங்கி உள்ளது. சுற்றத்தாருடன் சூழலை சுற்றி ரசிக்க வாய்ப்பளிப்பது மகிழ் உலா. மழலைப் பருவம் தொட்டு முதுமை வந்த பின்னும் உலகை சுற்றும் இன்பம் தெகட்டா தேன் கனியாய் உள்ளது.

இயற்கையோடு இசைந்தாடும் இன்பத்தைத் தாண்டி, சுற்றத்தாருடன் கூடி சுகவாழ்வு வாழவும் வழிசெய்கிறது இந்த சிற்றுலா. அறவாழ்வின் உயர்சிறப்பு ஈதல். நண்பர்கள், குடும்பத்தார், சுற்றத்தாருடன் உணவை பங்கிட்டுண்டு மகிழ்வது ஒரு அலாதி சுகம்...

சர்வதேச பிக்னிக் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 18 அன்று அனுசரிக்கப்படுகிறது. ஜூன் மாதம் இதை கொண்டாடக் காரணம், இக்கால பருவநிலைதான். உலகெங்கிலும் சமச்சீரான காலம் இது. மகிழ் உலாவும் சுற்றுலாவும் இயந்திரமான மனிதனை இயல்பு நிலைக்கு இயக்கும் இனிய ஆயுதம். சுருங்கிய மனம் கொண்ட வாழ்வை வானைப்போல் விரிவடைய செய்வதும் அதுவே!

உலகின் தலைசிறந்த புகைப்படக்கருவி நம் கண்கள்தான். அதன் நினைவில் இருந்து காலத்திற்கும் அழியாத அரும்பெறும் காட்சிகளை படைத்தளிப்பதும் இதுவே! சில சிற்றின்ப கனவுகளை நிறைவு செய்வது மகிழ் உலா. ஆனால், பலருக்கு சுற்றுலாவும் ஒரு கனவுதான்.

பேரின்பம் என்பது எதில் உள்ளது? அகமகிழ்விலேதான். அந்த பேரின்ப வீட்டின் ஓர் அரிய திறவுகோல் இது. ஓரிடம் கூடி அமர்ந்து, கதைகள் பல கலகலப்பாய் பேசி, வாழ்வின் களிப்புகளை காலம் கடக்க கனிந்துறைத்து அதோடு கூடவே கண்களுக்கும் விருந்து படைக்கும் விசால நிகழ்வு.

பள்ளி இன்பச் சுற்றுலா தொடங்கி, கல்லூரி வெளிவாச நிகழ்வு, அலுவலக சுமை நீக்கும் சுற்றுலா, ஓய்வு பெற்று அமர்கையிலும் அடி நெஞ்சம் வேண்டுவது ஓர் ஒய்யார சிற்றுலாவும் சுற்றுலாவும்தான்.

கொரோனா என்ற இக்கொடிய காலத்தில் மன அழுத்தத்தைக் குறைக்க மகிழ் உலா ஓர் சிறந்த வழி. ஆனால் இந்த ஊரடங்கில் தனிமனித இடைவெளி சற்று இயற்கையுடனும் தொடர்கிறது. அதன் காரணத்தால் வீட்டில் இருந்தே மெய்நிகர் சுற்றுலா வழி இன்பம் காண்போம்.

ப. மகிரிஷன்



# கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் . . .

மேற்கு வங்கத் தேர்தலில் முற்றிலும் காணாமல் போன காங்கிரசும் அதன் சில கூட்டணிக் கட்சிகளும் அந்த நிலைமை அடுத்து வர உள்ள குஜராத், உ.பி, உள்ளிட்ட ஏழு மாநில தேர்தல்களில் வந்துவிடக்கூடாது என்பதற்காக அரசியல் என்ற பெயரில் பல்வேறு பொய்களை அன்றாடம் கட்டவிழ்த்து விட்டு வருகிறது. மேலும், அனைத்து எதிர்கட்சிகளை ஒருங்கிணைக்க பிரசாந்த் கிஷோர் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளார். அவர்கள் சமீபத்தில் சொன்ன சில பொய்களில் சில...

**கன்று சீரம் விவகாரம்:**

கோவாக்சின் தடுப்பூசியில் புதிதாகப் பிறந்த கன்றின் சீரம் இருப்பதாகக்கூறப்படும்அறிக்கைகளைசுகாதாரஅமைச்சகம்இன்று மறுத்துள்ளது. இறுதி தடுப்பூசி உற்பத்தியின் ஒரு மூலப்பொருள் அல்ல. உண்மைகள் தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு வகையான மாடுகள் மற்றும் பிற விலங்குகளின் சீரம், வெரோ செல் வளர்ச்சிக்கு உலகளவில் பயன்படுத்தப்படும் ஒரு நிலையான செறிவூட்டல் மூலப்பொருள். வெரோ செல்கள் தடுப்பூசிகளின் உற்பத்திக்கு உதவும். இந்த நுட்பம் பல தசாப்தங்களாக போலியோ, ரேபிஸில், இன்ஃப்ளுயன்ஸா போன்ற தடுப்பூசி உற்பத்திகளிலும் பயன்படுத்தப்படுகிறது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**அயோத்தி நில விவகாரம்:**

அயோத்தியில் நிலம் வாங்கியதில் முறைகேடு என காங்கிரஸ், சமாஜ்வாடி, ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சியினர் தெரிவித்துள்ளனர். ஆனால், அது 2017ல் நீதிமன்ற தீர்ப்புக்கு முன்பே வாங்கப்பட்டது. தற்போது சந்தை மதிப்பு கூடிவிட்டது. சந்தை மதிப்பைவிட குறைவாகவே வாங்கப்பட்டுள்ளது என கோயில் நிர்வாகமும், விற்பனை செய்தவர்களும் தெளிவுபடுத்தியும் அக்கட்சிகள் பிடிவாதமாக அந்த செய்தியை பரப்பி வருகின்றன.

**ஜெய் ஸ்ரீராம் கோஷம்:**

உத்தர பிரதேசம் காஜியாபாத்தில் அப்துல் சமத் சைஃபி என்பவரை ‘ஜெய்ஸ்ரீ ராம்’ என சொல்ல சொல்லி சிலர் தாக்கியதாக ஒரு போலி வீடியோ பரப்பப்படுவதற்குப் பின்புலமாக இவர்களும் இவர்களுக்குத் துணையாக சில சார்பு ஊடகங்கள் செயல்படுவதும் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்த உடன் வேறு வழியின்றி உண்மையை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்கின்றனஅ ந்த ஊடகங்கள். நம் சன் டிவி உட்பட.

**விவசாய போராட்டம்:**

மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து பல மாதங்களாக டெல்லி எல்லையில் விவசாயிகள் எனும் பெயரில் போராட்டம் நடத்தும் கமிஷன் வியாபாரிகளுக்கு துணையாக நிற்பதும் காங்கிரஸ் தலைமையிலான எதிர்கட்சிகள்தான். வேளாண் சட்டங்களால் விவசாயிகள் நேரடியாக பலன் பெற்றுள்ளது தெரிந்தும் இவர்கள் விடாப்பிடியாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இப்படி, பொய் என தெரிந்தும் இவர்கள் அன்றாடம் சொல்லும் புதுப் பொய்களின் ஆயுள் ஒரு சில நாட்களுக்கு மட்டும்தான். அவை ஒருசில நட்களில் பொய் என நிரூபிக்கப்பட்ட உடன் அது குறித்து பேசாமல், மன்னிப்பு கேட்காமல் அடுத்த பொய்யை தேடி ஓடிவிடுகின்றன இக்கட்சிகள். இவர்கள் இதனைத் தொடர்ந்துகொண்டுதான் இருப்பார்கள். சார்பு ஊடகங்களும் இவர்களுக்கு நிச்சயம் துணை போவார்கள். மக்களாகிய நாம்தான் இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உண்மையை உணர வேண்டும்.

மதிமுகன்





விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006